DIOCESE OF PENANG
MALAYSIA

### *Translation of Document on*
### *PASTORAL DIRECTIVE FOR A DAY OF PRAYER & FASTING*
### *(Ref. No. PKK/BDN/2023/10/171)*

## ஒரு நாள் நோன்பிருந்து செபிக்க ஆயர் உத்தரவு

அன்புள்ள குருவானவர்களே, துறவற சகோதர சகோதரிகளே, விசுவாசிகளே, மற்றும் இறைமக்களே,

பினாங்கு, பேராக், பெர்லிஸ், கெடா மற்றும் கிளந்தான் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து இறைமக்களும் ஒரு நாள் நோன்பிருந்து செபிக்க அழைக்கப்படுகிறீர்கள்,

**13 அக்டோபர் 2023 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை காலை 6.00 மணி வரை அனுசரிக்கப்படும்.**

பின்வரும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நாம் நோன்பிருந்து செபிக்க ஒன்றுபடுவோம்:

1) 4 – 29 அக்டோபர் வரை உரோமில் நடைபெறவுள்ள ஆயர் மாமன்ற பேரவைக்காக.
2) பாலஸ்தீன மற்றும் இஸ்ரேல் பகுதிகளில் அமைதி மற்றும் நீதி நிலைநாட்டப்பட
3) கெனிங்காவ் சபாவில் நடைபெற உள்ள மலேசிய, சிங்கப்பூர் மற்றும் புருணையின் இளம் குருவானவர்களின் ஒன்றுகூடலுக்காக
4) உங்களுக்காக



இந்த நாளில் தியானிக்க 27ம் பொதுக்கால வாரத்தின் வெள்ளிக்கிழமை வாசகங்களை நான் பரிந்துரைக்கிறேன்

**முதல் வாசகம் யோவேல் 1:13-15, 2:1-2**
**பதிலுரை பாடல் திபா: 9:2-3,6,16,8-9**
**நற்செய்தி லூக் 11:15-26**



DIOCESE OF PENANG
MALAYSIA
Est. 1955

## *Translation of Document on*
## *PASTORAL DIRECTIVE FOR A DAY OF PRAYER & FASTING*
## *(Ref. No. PKK/BDN/2023/10/171)*

நோன்பு மற்றும் செப வழிகாட்டுதலுக்கு சில பரிந்துரைகள்:

✓ ஒரு முழு வேளை உணவு மற்றும் இரு வேளை சிறிய அளவில் உணவு எடுக்கவும்

✓ இறைச்சி மற்றும் மாமிச வகைகளை தவிர்க்கவும்

✓ இனிப்புகள், தின்பண்டங்கள், சுவையான பானங்கள் மற்றும் மதுபானங்களைத் தவிர்க்கவும்.

✓ முழு ஓய்வெடுக்க இரவு வேளையில் (மாலை 11க்கு - காலை 6.00 வரை) எடுக்கவும். முடியவில்லை என்றால் அன்னை மரியாவிடம் செபியுங்கள்.

✓ உரையாடல்களின் போது அதிகமாகக் கேளுங்கள் மற்றும் குறைவாகப் பேசுங்கள்.

✓ தொலைபேசி திரைவரம்பு மற்றும் சமூக ஊடக பயன்பாட்டை குறைக்கவும். வழக்கத்தை விட பயன்பாட்டு நேரத்தை குறைக்கவும்.

✓ தேவையில் இருப்பவர்களை அடையாளம் கண்டு இன்றே உணவை வழங்குங்கள்.

அக்டோபர் 13க்கு பிறகு இந்த கட்டளை பெறப்பட்டால் ஒரு பொருத்தமான நாளை நோன்பு மற்றும் செபத்திற்கு ஒப்புகொடுங்கள்.

பினாங்கு மறைமாவட்ட மற்றும் அதற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் ஆசிர் உரித்தாகுக!

கிறிஸ்துவில் உண்மையுள்ள,

**கார்டினல் செபஸ்டியன் பிரான்சிஸ்**





இந்த ஆவணம் பினாங்கு மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலர் குழுவினால் மொழிபெயர்க்கப்பட்டது